வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
கும்மிடிப்பூண்டி

வழக்கு எண் : CC 246/2019 காவல் நிலையம் : கவரப்பேட்டை காவல் நிலையம்

வழக்கு சாட்சி : PW 5

நாள் :21.04.2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முரளி | ஜாதி | : | |
| தந்தை /கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் பண்பாக்கத்தில் பூர்வீகமாக வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 30.06.2014 தேதி மாலை 2.30 - 3.30 க்குள்ளாக பெருவாயில் அருகில் உள்ள பள்ளிகூடம் அருகே எனக்கு முன்னால் ஒருநபர் பைக்கில் சென்றுக்கொண்டிருந்தார் நான் அவருக்கு பின்னால் பைக்கில் சென்றுக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு பின்னால் வேகமாக வந்த ஒரு லாரி எனக்கு முன்னால் சென்ற பைக்கில் சென்ற நபர் மீது மோதியது. அப்போது மேற்படி லாரியை ஓட்டிய ஓட்டுனர் அந்த இடத்திலேயே லாரியை விட்டுவிட்டு அங்கியிருந்து ஓடிவிட்டார். நான் என்னுடைய பைக்கை விட்டுவிட்டு மேற்கண்ட அடிப்பட்ட நபரை அருகில் இருந்த இரண்டு நபர்கள் உதவியுடன் அந்த அடிப்பட்ட நபருக்கு தண்ணீர் கொடுத்தேன். பின்னர் 108 ஆம்புலனஸ்க்கு போன் செய்து வரவைத்தேன். பின்னர் மேற்கண்ட அடிப்பட்ட நபருடைய பைக்கில் செல்போன் இருந்தது அதை நான் எடுத்து அதிலிருந்து போன் செய்தேன். அப்போது அந்த போனை எடுத்த நபரிடம் மேற்கண்ட நபரை குறித்து விவரம் சொன்னேன். பின்னர் மேற்படி அடிப்பட்ட நபருடன் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் மறுநாள் காலை 6 அல்லது 6.15 மேற்படி சம்பவம் இடமான பெருவாயிலுக்கு சென்றேன் அப்போது அங்கு போலீசார் கும்பலாக இருந்தார்கள். அப்போது அங்கியிருந்த போலீசார் கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அப்போது போலீசார் என்னிடம் மேற்கண்ட சம்பவம் குறித்து சாட்சி சொல்லுவிற்களா என்று கேட்டார்கள். மேற்படி போலீசார் மேற்கண்ட இடத்தை வரைந்தார்கள். அப்போது நான் போலீசாரிடம் என்னுடைய பெயர் மற்றும ' முகவரியை கொடுத்தேன். பின்னர் போலீசார் எழுதினார்கள். பின்னர் எழுதியதில் நான் கையொப்பம் போட்டேன். அந்த கையொப்பம் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உளள 1 வது

கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பம் **அதசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

(எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.)